## October 12, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வடக்கு ஆப்பிரிக்க நாடான சூடானில் துணை ராணுவப் படையான ஆர்எஸ் எஃப் நடத்திய எறிகணை மற்றும் ட்ரோன் தாக்குதலில் பொது மக்கள் 53 பேர் உயிரிழந்ததாக அந்த நாட்டு போரைக் உள்நாட்டுப் கண்காணித்துவரும் மருத்துவக் குழு தெரிவித்தது.
   i. இது குறித்து அந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆர் எஸ்எஃப் படையால் முற்றுகையிடப்பட்டுள்ள வடக்கு டார்ஃபர் மாகாணத் தலைநகரான அல்-பஷீரில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் உயிரிழந்தவர்களில் 14 சிறுவர்கள், 15 பெண்கள் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
   ii. சூடானில் அல்-புர்ஹான் தலைமையிலான ராணுவத்துக்கும், முகமது ஹம்தான் டகாலோ தலைமையிலான ஆர்எஸ்எஃப் துணை ராணுவப் படைக்கும் இடையே அதிகாரப் போட்டி காரணமாக கடந்த 2023 ஏப்ரல் 15-ஆம் தேதி முதல் சண்டை நடந்து வருகிறது.
   iii. இதில் லட்சக்கணக்கானவர்கள் உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது. சுமார் 1.4 கோடி பேர் இருப்பிடங்களை விட்டு புலம் பெயர்ந்துள்ளனர்.
   iv. இந்த மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சர்வதேச நாடுகள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் இதுவரை வெற்றி பெறவில்லை.
2. இந்தியா வந்துள்ள அமெரிக்காவின் முன்னணி செமிகண்டக்டர் 'சிப்' தயாரிப்பு நிறுவனமான குவால்காமின் தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) கிறிஸ்டியானோ ஆர்.அமோனுடன் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை மேற்கொண்டார். புது தில்லியில் உள்ள பிரதமர் அரசு இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
   i. இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பிரதமர் வெளியிட்ட பதிவில், 'கிறிஸ்டியானோ அமோனுடனான சந்திப்பின்போது செயற்கை நுண்ணறிவு, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் திறன் மேம்பாடு குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.
3. வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உதவி அளிக்க நிர்பயா நிதியின் மூலம் நாடு முழுவதும் 854 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் அன்னபூர்ணா தேவி தெரிவித்தார். உச்சநீதிமன்றத்தின் சிறார் நீதிக் குழுவும் யூனிசெஃப் இந்தியாவும் இணைந்து தில்லியில் பெண் குழந்தைகளைக் காப்பாற்றுவது தொடர்பான இருநாள் தேசியக் கருத்தரங்கை நடத்துகின்றன. இந்தக் கருத்தரங்கில் பங்கேற்று அமைச்சர் அன்னபூர்ணா தேவி பேசிய தாவது:
   i. இந்தியாவில் கடந்த ஆண்டு சட்டரீதியாக தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளில் 56 சதவீதம் பெண் குழந்தைகளாவர். இது சமூக அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் காட்டுகிறது. தற்போது பெண் குழந்தைகள் ஒரு சுமையாக கருதப்படாமல் நம்பிக்கை ஒளியாகப் பார்க்கப்படுகின்றனர்.
   ii. பெண்களுக்கு உதவுவதற்காக தேசிய அளவில் 181 என்ற இலவச தொலைபேசி சேவை நடைமுறையில் உள்ளது. காவல் நிலையங்களில் பெண்களுக்கான உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
   iii. இந்தியாவை வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாக மாற்றுவது என்ற பிரதமர் நரேந்திர மோடியின் லட்சியக் கண்ணோட்டத்தின் மையமாக பெண் சக்தி உள்ளது.
   iv. பெண்களின் பாதுகாப்பு, அதிகாரமளித்தல், தற்சார்பு ஆகியவற்றை மேம்படுத்த மிஷன் சக்தி, மிஷன் வாத்சல்யா, மிஷன் போஷண் 2.0 உள்ளிட்ட திட்டங்கள்

அமல்படுத்தப்படுகின்றன. பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தலுக்காக இந்தியா விரிவான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது.

v. குழந்தைகள் துன்புறுத்தப்படுவதை சகித்துக் கொள்ளாத கொள்கையை நாம் பின்பற்றுவது அவசியமாகும். சிறார் நீதிச் சட்டம், போக்ஸோ, குழந்தைகள் திருமண தடுப்புச் சட்டம், கல்வி உரிமைச் சட்டம் ஆகியவை குழந்தைகளுக்கு வலுவான சட்டப் பாதுகாப்பை அளிக்கின்றன.

vi. நாடு முழுவதும் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு புகலிடம், ஆலோசனை, மருத்துவ உதவி, சட்ட உதவி உள்ளிட்ட உதவிகளை அளிக்க நிர்பயா நிதியின் மூலம் 854 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

vii. கருத்தரங்கில் யூனிசெஃப் அமைப்பின் இந்தியப்பிரதிநிதி சிந்தியா மெக்கேஃப்ரி பேசுகையில் குழந்தைகளின் பாதுகாப்புக்காக இந்தியா எடுத்துவரும் நடவடிக் கைகளைப் பாராட்டினார்.

4. மங்கோலிய அதிபர் குரேல்சுக் உக்னா திங்கள்கிழமை (அக். 13) முதல் நான்கு தினங்களுக்கு இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

   i. அவருடன் அந்நாட்டு அமைச்சர்கள், எம்.பி.க்கள், உயர் அதிகாரிகள், வர்த்தகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட உயர்நிலைக் குழுவினரும் இந்தியாவுக்கு வருகை தருகின்றனர்.

   ii. மங்கோலிய அதிபர் என்ற முறையில் குரேல்சுக் மேற்கொள்ளும் முதல் இந்தியப் பயணம் இதுவாகும். எரிசக்தி, சுரங்கம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகளை ஆராய்வது அவரது பயணத்தின் நோக்கமாகும்.

   iii. இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் 'இரு தரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆராயவும், உறவுகளை வலுப்படுத்தவும், பிராந்திய, சர்வதேச விவகாரங்கள் குறித்து கருத்து பரிமாற்றம் செய்துகொள்ளவும் மங்கோலிய அதிபரின் இந்தியப் பயணம் இருநாட்டுத் தலைவர்களுக்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. பிகாரின் சரண் மாவட்டத்தில் உள்ள மறைந்த சோஷலிஸ தலைவர் ஜெயபிரகாஷ் நாராயணின் பூர்விக வீட்டை பார்வையிட்டு, அவருக்கு மரியாதை செலுத்தினார் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்.

   i. 'லோக் நாயக்', 'ஜெ.பி.' என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் சோஷலிஸ தலைவரும் சுதந்திரப் போராட்ட வீரருமான ஜெயபிரகாஷ் நாராயணின் 123- ஆவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது.

6. கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த், மூன்று நாடுகளுக்கான அரசுமுறைப் பயணத்தின் முதல்கட்டமாக இந்தியாவுக்கு வரவுள்ளார்.
இந்தப் பயணத்தின்போது, வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் ஆகியோருடன் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

   i. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த், இந்தியா, சிங்கப்பூர், சீனா ஆகிய மூன்று நாடுகளுக்கான 6 நாள்கள் அரசுமுறைப் பயணத்தை தொடங்குகிறார். முதல்கட்டமாக இந்தியாவுக்கு வருகை தரும் அவர், தில்லியில் மத்திய அமைச்சர்களை சந்தித்துப் பேசவுள்ளார்.

   ii. அப்போது, வர்த்தகம், எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு வியூக ஒத்துழைப்புக்கான கட்டமைப்பை நிறுவுவது குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.

7. தமிழகத்தில் நிகழாண்டில் 16,546 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்கு பாதிப்பு, உயிரிழப்புகளைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.
   i. சென்னை அரசு மருத்துவமனைகளில் 71 படுக்கைகளுடன் டெங்கு காய்ச்சலுக்கு தனி வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.
   ii. தமிழகத்தில் பரவலாகப் பெய்துவரும் மழையால் டெங்கு காய்ச்சல் அதிகரித்து வருகிறது.
   iii. டெங்கு காய்ச்சல் ஏடிஸ் கொசுக்களால் பரவுகிறது.
   iv. கொசுப்புழு உற்பத்தியைத் தடுக்க சென்னை மாநகராட்சி சார்பில் கொசு ஒழிப்புப் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இருப்பினும், கொசு உற்பத்தியை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால், டெங்கு பாதிப்பும் அதிகரித்து பரவத் தொடங்கியுள்ளது.
8. இந்தியாவிலேயே முதல் முறையாக, சென்னையில் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டுள்ள கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.
   i. வண்ண மீன் வர்த்தகத்தை பெரிய அளவில் மேம்படுத்தவும், கொளத்தூர் பகுதியில் நடைபெற்று வரும் வர்த்தகத்தை உலக அளவில் கொண்டு சென்றிடவும், உலகத் தரத்திலான பிரத்யேக வண்ண மீன் வர்த்தக மையம் நிறுவப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.
   ii. இந்த வண்ண மீன் வர்த்தக மையத்தில், மொத்தம் மற்றும் சில்லறை வண்ண மீன்கள் விற்பனை செய்வதற்காக 185 கடைகள், ஆய்வகம், பயிற்சிக் கூடம், உணவு அரங்கம், பார்வையாளர் அரங்கம் ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
9. மொத்தம் ரூ.35,440 கோடி மதிப்பீட்டிலான இரு பெரும் வேளாண் திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
   i. இவ்விரு திட்டங்களும் கோடிக்கணக்கான விவசாயிகளின் வாழ்வை வளமாக்கும் என்று குறிப்பிட்ட பிரதமர், 'இறக்குமதி சார்புத் தன்மையைக் குறைப்பதுடன், உலகளாவிய தேவைக்கு ஏற்ப பயிர் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்' என்று விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்தார்.
   ii. தில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற சிறப்பு வேளாண் நிகழ்ச்சியில் ரூ.24,000 கோடி மதிப்பீட்டிலான பிரதமரின் தன தான்ய கிருஷிதிட்டம், ரூ.11,440 கோடி மதிப்பீட்டிலான பருப்பு உற்பத்தி தற்சார்புத் திட்டம் ஆகிய இரு முக்கியத் திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார்.
   iii. நாட்டில் 2030-31-ஆம் ஆண்டுக்குள் பருப்பு உற்பத்தியை தற்போதுள்ள 252.38 லட்சம் டன்னில் இருந்து 350 லட்சம் டன்னாக அதிகரிக்கும் நோக்கில் பருப்பு உற்பத்தி தற்சார்பு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 2030-31ஆம் ஆண்டு வரை இரு திட்டங்களும் செயல்படுத்தப்படும்.
10. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு வரும் நவம்பர் 1- ஆம் தேதி முதல் அல்லது அதற்கு முன்பே கூடுதலாக 100 சதவீத வரி விதிக்கப்படும்' என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கை விடுத்தார்.
   i. சீனாவில் வெட்டிஎடுக்கப்படும் அரிய கனிமங்கள் ஏற்றுமதிக்கு சீன அரசு புதிய கட்டுப்பாடுகளை விதித்த நிலையில், இந்த எச்சரிக்கையை டிரம்ப் விடுத்தார்.
   ii. சீனப் பொருள்களுக்கு அமெரிக்கா ஏற்கெனவே 30 சதவீத வரியை விதித்துள்ளது. தற்போது புதிய வரி கூடுதலாக விதிப்படும் நிலையில் வரி 130 சதவீதமாக உயரும். ஏற்கெனவே, இந்திய பொருள்களுக்கு 50 சதவீத வரியை

டிரம்ப் விதித்துள்ளார்.

iii. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான வரியை 145 சவீதமாக அமெரிக்கா உயர்த்தியது. இதற்கு, பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்க பொருள்கள் மீதான வரியை சீனா 125 சதவீதமாக உயர்த்தியது.

iv. பின்னர் பேச்சுவார்த்தையில் சீனா 10 சதவீதமாகவும், அமெரிக்கா 30 சதவீதமாகவும் வரியைக் குறைத்தன.

v. தற்போது, சீன பொருள்கள் மீது கூடுதலாக 100 சதவீத வரி விதிக்கப்படும் என்று டிரம்ப் எச்சரித்துள்ளார்.

11. ஊராட்சிகளின் மூன்று முக்கியத் தேவைகள் உடனடியாக நிறைவேற்றப்படும் என கிராம சபைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியளித்தார்.

i. தமிழகம் முழுவதும் அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. சென்னையில் தனது முகாம் அலுவலகத்தில் இருந்து காணொலி மூலம் இந்தக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

ii. இந்தியாவில் வேறெந்த முதல்வரும் இப்படி கிராம சபைக் கூட்டங்களில் பங்கேற்றதில்லை. அதிலும், தமிழ்நாட்டின் வரலாற் றிலேயே இவ்வளவு பெரிய அளவில், 10,000-க்கும் மேற்பட்ட ஊராட்சிகளை இணையவசதி மூலம் இணைத்து கிராம சபைக் கூட்டத்தை நடத்துவது இதுதான் முதல்முறையாகும்.

iii. ஆண்டுதோறும் ஆறுமுறை கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப் படுகின்றன. இந்தக் கிராம சபைக் கூட்டங்கள்தான், ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை உணர வைக் கிற முக்கியத் தருணமாகும். கிராமங்களின் இப்போதைய தேவைகள், வளர்ச்சி இலக்குகள், நலன்கள் குறித்து நேரடியாக விவாதித்து தீர்மானங்களை நிறைவேற்றுகிற ஒரு விழாவாகக் கொண்டாட வேண்டும்.

iv. குடிசையில்லாத தமிழ்நாடு என்ற இலக்கை எட்டும் வகையில், ‘கலைஞரின் கனவு இல்லம்' என்கிற புரட்சிகர திட்டம் தொடங்கப்பட்டு, கடந்த 2 ஆண்டுகளில் ரூ.7,000 கோடியில் 2 லட்சம் வீடுகள் கட்ட முடிவெடுக்கப்பட்டது. இதுவரை 99,453 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன. நிகழாண்டில் 78,312 வீடுகள் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது.